நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 31.10.2018

2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.10.2018ம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.ந.சரவணக்குமார்.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்(பொ)

**1)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் "செப்டம்பர் 2018ம்" மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண் : 250 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3650/2017/சி1)**

**2)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு தேவையான நீராவி கொதிகலன் (Steam Boiler) விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு 22.10.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | M/s Renuka Enterprises, Madurai. | ரூ. 87,000/– |
| 2 | M/s Devi Straps, Madurai. | ரூ. 94,800/– |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வ.எண்.1ல் M/s Renuka Enterprises, Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 251 அனுமதிக்கப்பட்டது.**
**( ந.க.எண்: 5835/2018 /இ1).**

**3)** இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு.V. மாரிச்சாமி மற்றும் 17 நபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதால் மேல்முறையீடு மற்றும் மறுசீராய்வு நகராட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டதில் மீண்டும் அவர்களுக்கு சாதகமாக 30.05.2017ல் தீர்ப்பாகியுள்ளது. அதன்மீது, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 35083/2013/j3 நாள்.14.06.2017ல் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய கோரியதன் அடிப்படையில் டெல்லி உச்சநீதிமன்றத்தில் SLP(C) No. 21654/2017 வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கிற்கு திரு. I. கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்ச நீதிமன்றம் அவர்களின் 12.10.2018ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. Legal Fees for Vakalat – ரூ. 15,000/–

2. Toward appearance Fee dated (15.12.2017,23.12.2017, 16.04.2018,13.07.2018,13.08.2018,11.10.2018 ( 6x10,000) – ரூ. 60,000/–

3. Preparing & Vetting Counting Affidavit – ரூ. 20,000/–

ரூ. 95,000/–

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**( ந.க.எண். 2760/2018/எச்1)**
**தீர்மான எண்: 252 அனுமதிக்கப்பட்டது.**

**4)**அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் திரு.V. மாரிச்சாமி மற்றும் 17 நபர்களால் தொடரப்பட்ட மறுசீராய்வு வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற முழு அமர்வு 30.05.2017ம் தேதிய ஒருங்கிணைந்த தீர்ப்பின் மீது டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஆணையாளர், போடிநாயக்கனூர் நகராட்சி அவர்களை 19வது பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட SLP(C) No. 22176/2017 வழக்கிற்கு திரு. I. கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்ச நீதிமன்றம் அவர்களின் 12.10.2018ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

Towards appearance Fee dated (09.10.2017, 15.12.2017, 23.02.2017, 16.04.2018,13.07.2018,13.08.2018,11.10.2018 ( 7x10,000) : ரூ. 70,000/–

ரூ. 70,000/–

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**( ந.க.எண். 2760/2018/எச்1)**
**தீர்மான எண்: 253 அனுமதிக்கப்பட்டது.**

**5)** திரு.ப.நடராஜன் ஒப்பந்ததாரர் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகைகள் திரும்ப வழங்க கோரி 17.10.2018ம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளார். இந்த தொகை காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கலம் 3ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் குறித்து ஒப்பந்ததாரர் பெயரில் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லாததால் கீழ்க்கண்ட ரூ. 46634/– திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண்<br>(1) | நாள்<br>(2) | பக்க எண்<br>வரிசை எண்<br>(3) | தொகை ரூ.<br>(4) |
|---|---|---|---|
| 1 | 22.04.2015 | 13/110 | 7000 |
| 2 | 27.01.2016 | 15/132 | 3000 |
| 3 | 22.02.2016 | 16/135 | 10000 |
| 4 | 22.02.2016 | 16/136 | 23134 |
| 5 | 29.03.2016 | 16/139 | 3500 |
| மொத்தம் | | | **46634** |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 6169/2018/பி3)**

**தீர்மான எண்: 254 அனுமதிக்கப்பட்டது.**

**6)** திரு.எம்.சுகுமார் ஒப்பந்ததாரர் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகைகள் திரும்ப வழங்க கோரி 22.10.2018ம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளார். இந்த தொகை காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கலம் 3ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் குறித்து ஒப்பந்ததாரர் பெயரில் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லாததால் கீழ்க்கண்ட ரூ.18618/— திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண்<br>(1) | நாள்<br>(2) | பக்க எண்<br>வரிசை எண்<br>(3) | தொகை ரூ.<br>(4) |
|---|---|---|---|
| 1 | 22.11.2015 | 27/490 | 1500 |
| 2 | 15.12.2015 | 28/506 | 7750 |
| 3 | 05.03.2012 | 13/149 | 3668 |
| 4 | 30.06.2011 | 21/239 | 5700 |
| மொத்தம் | | | **18618** |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 6176/2018/பி3)**

**தீர்மான எண்: 255 அனுமதிக்கப்பட்டது.**

**7)** திரு.ப.நடராஜன் ஒப்பந்ததாரர் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகைகள் திரும்ப வழங்க கோரி 17.10.2018ம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளார். இந்த தொகை காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கலம் 3ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் குறித்து ஒப்பந்ததாரர் பெயரில் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லாததால் கீழ்க்கண்ட ரூ.9100/— திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நாள் (2) | பக்க எண் வரிசை எண் (3) | தொகை ரூ. (4) |
|---|---|---|---|
| 1 | 24.02.2014 | 23/413 | 700 |
| 2 | 24.02.2014 | 30/564 | 1500 |
| 3 | 07.01.2014 | 21/352 | 1500 |
| 4 | 01.04.2013 | 6/82 | 4150 |
| 5 | 25.07.2014 | 10/156 | 750 |
| 6 | 27.01.2015 | 14/241 | 500 |
| மொத்தம் | | | **9100** |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 6122/2018/பி3)**

**தீர்மான எண்: 256 அனுமதிக்கப்பட்டது.**

**8)** திரு.எஸ்.வேலுச்சாமி ஒப்பந்ததாரர் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகைகள் திரும்ப வழங்க கோரி 22.10.2018ம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளார். இந்த தொகை காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கலம் 3ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் குறித்து ஒப்பந்ததாரர் பெயரில் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லாததால் கீழ்க்கண்ட ரூ. 235730/– திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நாள் (2) | பக்க எண் வரிசை எண் (3) | தொகை ரூ. (4) |
|---|---|---|---|
| 1 | 28.06.2014 | 4/39 | 6042 |
| 2 | 30.12.2013 | 4/52 | 8000 |
| 3 | 17.01.2014 | 4/54 | 21704 |
| 4 | 14.02.2014 | 5/57 | 19000 |
| 5 | 06.03.2014 | 5/66 | 10000 |
| 6 | 06.03.2014 | 5/70 | 10000 |
| 7 | 06.03.2014 | 6/74 | 5000 |
| 8 | 06.03.2014 | 6/75 | 9000 |
| 9 | 06.03.2014 | 6/76 | 10000 |
| 10 | 28.06.2014 | 10/146 | 8000 |
| 11 | 22.09.2014 | 11/175 | 6000 |
| 12 | 22.09.2014 | 11/176 | 9800 |

| | | | |
|---|---|---|---|
| 13 | 22.09.2014 | 11/177 | 13242 |
| 14 | 22.09.2014 | 12/184 | 10000 |
| 15 | 30.10.2014 | 12/197 | 10000 |
| 16 | 14.11.2014 | 13/211 | 5000 |
| 17 | 25.11.2014 | 13/218 | 10890 |
| 18 | 08.12.2014 | 13/220 | 15746 |
| 19 | 13.03.2015 | 15/260 | 6355 |
| 20 | 20.04.2015 | 18/301 | 10000 |
| 21 | 21.04.2015 | 18/303 | 12401 |
| 22 | 07.05.2015 | 18/304 | 9750 |
| 23 | 07.05.2015 | 12/308 | 9800 |
| மொத்தம் | | | **235730** |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
( ந.க.எண். 6175/2018/பி3)
**தீர்மான எண்: 257 அனுமதிக்கப்பட்டது.**

**9)** போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்டபட்ட தமிழக அரசின் 2ம் ஆண்டு சாதனை தொழில் மலர் நகராட்சி திட்டப் பணிகள் 2018ம் ஆண்டிற்கான சிறப்பு தொழில்மலரில் மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு விளம்பரம் வெளியிடப்பட்டது. அதற்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். கீழ்க்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உரிய தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | தினமலர் | ரூ. 19740– |
| 2. | தினத்தந்தி | ரூ.24575– |

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 6571/2018/இ1)
**தீர்மான எண்: 258 அனுமதிக்கப்பட்டது.**

**10)** போடிநாயக்கனூர் நகராட்சி புதுக்காலனி 9–வது தெரு வார்டு எண்.33 பகுதியில் வசிக்கும் ஆண்டவர் மனைவி சரஸ்வதி என்பவரின் வீட்டின் சுவற்றில் ஆலமரம் மற்றும் அரசமரம் சாய்ந்து அபாயகரமாக இருப்பதால் அதனை அப்புறப்படுத்துவதற்கு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி ஆலமரம் மற்றும் அரசமரங்கள் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டப்பிரிவு 133/1 (ஈ) ன்படி அவசிய சூழ்நிலை கருதி நகராட்சி ஆணையாளர் மூலம் அப்புறப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,000/–

பொதுநிதியிலிருந்து செலவினம் செய்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**( ந.க.எண்: 4381/2018 /இ1)**
**தீர்மான எண்: 259 அனுமதிக்கப்பட்டது.**

**11)** இந்நகராட்சி அலுவலவலகத்தில் உள்ள கணினியில் உபயோகத்திற்கு தேவையான5 KVA UPS மின் இணைப்பில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக பழுதடைந்துவிட்டதால், அவசர அவசியத்தின் முன்னிட்டு வசூல் மற்றும் சொத்துவரி சீராய்வு பணி பாதிக்காவண்ணம், மேற்படி பழுது பணி மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16,000/—ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பழுது பணி மேற்கொள்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும், பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 3215/2018/இ1)

**தீர்மான எண்: 260 அனுமதிக்கப்பட்டது.**

**12)** இந்நகராட்சி அலுலவலகத்தில் உள்ள பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் Ricoh Xerox cum priniter Drumkit, Developer kit & Blade மற்றும் பொறியியில் பிரிவில் Blade பழுதடைந்துள்ளதை அவசர அவசியம் கருதி Thirupathi Office Products, Madurai அவர்களின் மூலம் மாற்றப்பட்டு பழுதுபணி மேற்கொண்டமைக்கான உத்தேச செலவினம் ரூ.25,000/—ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பழுது பணி மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
( ந.க.எண். 1376/2018/இ1)
**தீர்மான எண்: 261 அனுமதிக்கப்பட்டது.**

**13)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் செல்லும் கால்வாய்களில் சாக்கடைமண் நிரம்பி உள்ளதாலும் அதனை அப்புறப்படுத்த இந்நகராட்சியில் போதிய வாகனங்கள் தற்போது இல்லாத காரணத்தினாலும் வேளாண் பொறியியல் துறை நிர்ணயித்த தினசரி வாடகை தொகையின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் டிராக்டர் டிப்பர் வாடகைக்கு அமர்த்தி துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி.

**(ந.க.எண்.5665/2018/H2)**
**தீர்மான எண்: 262 அனுமதிக்கப்பட்டது.**

**14)** போடிநாயக்கனூர் நகராட்சி செயல்படுத்தப்படும் நவீன எரிவாயு தகனமேடை பெரியார் சேவை மையம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது பிரேதம் எரியூட்டப்படும் பகுதியில் உள்ள Fire bricks சேதமடைந்து உள்ளது. மேலும் சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.6715/2018/இ1)

**தீர்மான எண்: 263 அனுமதிக்கப்பட்டது.**

**15)**போடிநாயக்கனூர் நகராட்சி பேருந்து நிலையத்தில்சிறப்பு மராமத்துப்பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.6716/2018/இ1)

**தீர்மான எண்: 264 அனுமதிக்கப்பட்டது.**

**16)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு புதிய கூடுதல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.76.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் 06.07.2018ம் தேதிய அரசாணை (நிலை) எண்.72 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது. உதவி நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்ட உருவாக்கம், உபகோட்டம்–1, மதுரை அவர்களின் 27.09.2018ம் தேதிய கடித எண். உ.நி.பொ–1/கோ–போடி–2018ல் கேட்டுக் கொண்டதற்கிணங்க நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடுசெய்யவும் மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

1. போடிநாயக்கனூர் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தினை த.கு.வ.வாரியம் மூலம் செயல்படுத்தும்போது ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு அதிகரிக்கும் பட்சத்தில் திட்ட மதிப்பீட்டுத் தொகையை விட ஏற்படும் கூடுதல் செலவின தொகையை போடிநாயக்கனூர் நகராட்சி ஏற்றுக் கொள்வதென மன்றம் அனுமதி கோரப்படுகிறது.
2. போடிநாயக்கனூர் நகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக தோண்டப்படும் குழிகளை தோண்டப்பட்ட மண்ணால் மூடிய பின் அப்பகுதியினை மறுபரிசீரமைப்பு செய்யப்படும் வகையின் கீழ் சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மற்றும் பேவர்பிளாக் சாலைகளை மட்டும் மதிப்பீட்டில் சேர்த்து செயல்படுத்துவதை மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 7131/2015/இ1)

**தீர்மான எண்: 265 அனுமதிக்கப்பட்டது.**

**17)** போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரிலும், நகர் நல அலுவலரின் அனுமதி அளித்ததன் பேரிலும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

1. தூய்மை இந்தியா திட்டம்
2. தனி நபர் கழிப்பறை
3. திடக்கழிவு மேலாண்மை
4. டெங்கு காய்ச்சல் போன்ற

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்க ஒன்றுக்கு ரூ. 6000/– வீதம் மொத்தம் மக்கள் அதிகமாக கூடும் 8 இடங்களில் நடத்த ரூ. 48,000/– செலவினத்தை 2018–2019 ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1965/2018/H2,**
**நாள். 07.06.2018)**

**தீர்மான எண்: 266 அனுமதிக்கப்பட்டது.**

**18)** போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் பணியிடம் 148 போக அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை 270 என்பதால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணியினை செவ்வனே செய்தவற்கு தனியார் நிறுவனம் மூலம் 70 பணியாளர்களை பணிக்கு அமர்த்த துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.31, நாள். 31.01.2015ல் ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்காணும் ஒப்புதலின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கடித ந.க.எண்.6004/பி3/2015 நாள்.24.04.2015ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி அனுமதியின் அடிப்படையில் அவர்லண்ட் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்திற்கு 31.07.2018 வரை பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணிக்காலம் 31.07.2018 உடன் முடிவடைந்துவிட்டதால், இந்நகராட்சி பொது சுகாதாரத்தி. அவசியம் கருதியும், மேற்படி நிறுவனம் பணியினை தொடர்ந்து செய்வதற்கு விருப்பம் தெரிவித்து 16.07.2018ம் தேதியி கடிதத்தில் தெரிவித்துள்ளதாலும், 01.08.2018 முதல் 31.10.2018 முடிய மூன்று மாத காலத்திற்கு, சுகாதார பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.174, நாள்.10.08.2018ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, இது நாள் வரை ஆணை வராததாலும் தற்போது டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் மற்றும் மர்மக் காய்ச்சல் முதலியவை தமிழகத்தில் பரவி வருவதால், அவற்றைத் தடுக்க பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள போதிய துப்புரவுப் பணியாளர்கள் தேவைப்படுவதாலும், மேற்காணும் நிறுவனம் பணியினை தொடர்ந்து செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாலும், 01.11.2018ல் இருந்து 31.12.2018 வரை மேமம் இரண்டு மாத காலத்திற்கு, 2018–2019ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர், தேனி அவர்கள் நியமனம் செய்த தினக்கூலி ஊதிய மதிப்பீடு அடிப்படையில் 70 துப்புரவு பணியாளர்களை கொண்டு அதே நிறுவனத்தின் வாயிலாக தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகையின் அடிப்படையில் தொகை ரூ.16 இலட்சத்தினை 2018–2019ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : இந்நகராட்சி பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், அவல்லேண்ட் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தின் வாயிலாக 70 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப்பணி 01.11.2018 முதல் 31.12.2018 வரையிலான காலத்திற்கு மேற்கொள்ளவும் உத்தேச செலவினத் தொகை ரூ.16 இலட்சத்தினை 2018–2019ம் ஆண்டுக்கான நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண்: 3491/2018 /எச்2)**

**தீர்மான எண்: 267 அனுமதிக்கப்பட்டது.**

**19)** போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க, கொசுபுழு ஒழிப்புப் பணி, கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் பணி மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு தடுப்பு வழிமுறைகள் தொடர்பாக நலக்கல்வி அளித்தல் பணி போன்ற பணிகளை தொடர்ந்து முழுமையாக மேற்கொள்வதற்கு இந்நகராட்சியில் 60 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நகர்மன்ற தீர்மான எண் 101 நாள்.30.05.2018ல் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியாளர்களின் பணி ஒப்பந்தகாலம் செப்டம்பர்–2018 உடன் முடிவடைவதாலும், தற்போது டெங்கு காய்ச்சல், பன்றிக்காய்ச்சல், மற்றும் மர்மக் காய்ச்சல் முதலியவை தமிழகத்தில் பரவி வருவதால் அவற்றை தடுக்க பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள போதிய துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுவதாலும் அக்டோபர் 2018 முதல் – மேலும் 1 வருட காலத்திற்கு அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் வரை தொடர்ந்து பணியமர்த்தவும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2018–2019ம் ஆண்டு தினக் கூலி மஸ்தூர் பணியாளர்களின் நாள் ஒன்றுக்கு 213/– வீதம் EPF & INSURANCE (14%) என்கின்ற ஊதிய விகிதத்தில் மற்றும் 2019–20ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்படும் ஊதிய உயர்வினை கருத்தில் கொண்டும் உத்தேச செலவினத் தொகை ரூ. 61,00,000/–னை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6709/2013/எச்1)**

**தீர்மான எண்: 268 அனுமதிக்கப்பட்டது.**

**20)** போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனங்களின் இயக்கம் (ம) எரிபொருள் செலவினத்தை கண்காணிப்பதற்கு ஏதுவாக GPS கருவி

பொருத்துவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 80,000/— இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2864/2013/எச்2)**
**தீர்மான எண்: 269 அனுமதிக்கப்பட்டது.**

**21)** போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு சிறைக்காடு உரக்கிடங்கில் குப்பைகள் அதிக அளவில் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதால் Bio-mining இயந்திரம் முழுவதுமாக இயங்கும் வரை வேளாண்மை பொறியியல் துறையிடம் இருந்து Hitachi Chain dozer இயந்திரத்தை வாடகை அடிப்படையில் வாங்கி மேற்கண்ட குப்பைகளை ஒதுக்கி அப்புறப்படுத்தவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5044/2018/H2)**

**தீர்மான எண்: 270 அனுமதிக்கப்பட்டது.**

**22)** போடிநாயக்கனூர் நகராட்சி சுப்புராஜ் நகரில் உள்ள SLR Tank (OHT) 8'' Sulice Out let valve spindle rod, (Tuide nut door) காடி பழுதடைந்து வால்வு இயங்கவில்லை. மற்றும் புதிய நீர்வடி நிலையத்தில் வடிநீர் தொட்டி எண்.1 Sulice valve key rod பழுதினை சரிசெய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.7500/—ஐ மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கும் இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.959/2018/E1)**
**(ந.க.எண்.1475/2018/E1)**
**தீர்மான எண்: 271 அனுமதிக்கப்பட்டது.**

**23)** போடிநாயக்கனூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கு 22 டம்பர் பிளேசர் தேவைப்படுவதால் முதற்கட்டமாக ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் 14 பின்கள் (4.50 க.நீ கொள்ளளவு) வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.7032/2018/E1)**
**தீர்மான எண்: 272 அனுமதிக்கப்பட்டது.**

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.